# ஒரு கூட்டுப் புறாக்கள்

---

**Que.1. கீழக்கண்ட தன்விவரப் பட்டியலின் அடிப்படையில் வாழக்கைக் குறிப்பு தயார் செய்யுங்கள்.**

**பெயர் மு வரதராசனார்**

**பிறப்பு ஏப்ரல் 25, 1912**

**வெல்லூர், தமிழ்நாடு**

**தொழில் தமிழ்ப் பேராசிரியர், எழுத்தாளர்**

**படைப்புகள் இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், சிறுகதைகள், புதினங்கள்**

**விருது சாகித்திய அகாதமி (அகல் விளக்கு)**

**இறப்பு 1974 அக்டோபர் 10**

**Ans.** வாக்கிய அமைப்பு - 2

மொழிநடை -1

**Que.2. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 29-ஆம் நாள் பாண்டிச்சேரியில் பிறந்தார். இவரது பெற்றோர் கனகசபை, இலக்குமி அம்மையார். இவர் குடும்ப விளக்கு, பாண்டியன் பரிச, இருண்ட வீடு, தமிழ் இலக்கியம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல் ஆகியவை உட்பட சிறந்த சிறந்த படைப்புக்களை எழுதியுள்ளார். இவரது அமைதி ஊமை என்ற படைப்புக்காக சாகித்திய அகாடமி விருது கிடைத்துள்ளது. புரட்சிக் கவிஞர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளார். இவரைக் கௌரவிக்கும்பொருட்டு தமிழக அரசு இவரது படத்தை தபால் தலையாக வெளியிட்டுள்ளது. இவர் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ஆம் நாள் இவர் இயற்கை எய்தினார்.**

**இவ்விவரங்களின் அடிப்படையல் தன் விவரப் பட்டியல் தயார் செய்யுங்கள்.**

**Ans.** சரியான வரிசைமுறை - 2

சொற்சுருக்கம் – 1

**Que.3. கங்கை பாயும் வங்கம்**

**செந்நெல் கதிர்கள் சாயும் தமிழகம்**

**தங்கம் விளையும் கன்னடம் - நல்**

**தென்னை வளரும் கேரளம்**

**ஆந்திரம் அசாம் மராட்டி**

**ராஜஸ்தான் பாஞ்சாலமும்**

**சேர்ந்து அமைந்த தேசம்**

**எங்கள் அன்னை பூமி பாரதம்**

**இப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள இந்திய மாநிலங்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** வங்கம், தமிழகம், கேரளம், ஆந்திரம், அசாம், இராஜஸ்தான், பஞ்சாப்

**Que.4.**



**(அ) வண்ணங்களின் விழா என அழைக்கப்படும் இவ்விழாவின் பெயரை எழுதுங்கள்.**

**(ஆ) இவ்விழாவில் வெளிப்படும் ஒற்றுமை உணர்வைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** (அ) ஹோலிப் பண்டிகை -1

(ஆ) வயது வரம்பு இல்லாத அனைத்து பிரிவினரும் கொண்டாடும் முறை பற்றிய விளக்கம் – 2

**Que.5. ஜனவரி 26 -ஆம் நாள் குடியரசு தினத்தன்று உங்கள் பள்ளியில் விடுதலை வீரர்களின் தியாகச் செயலைப் போற்றுமாறு கருத்தரங்கம் ஒன்று நடைபெற உள்ளது. இதில் சட்டமன்றத் தலைவர் பங்கு பெற்று தலைமையுரை ஆற்றுகிறார். இதற்கான சுவரொட்டி ஒன்று தயார் செய்யுங்கள்.**

**Ans.** சொற்தெளிவு -1

சொற்சுருக்கம் -1

வடிவம் -1

**Que.6. 'எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே'**

**என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் சமூகத்திற்கு உணர்த்தும் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுங்கள்**

**Ans.** பாடலின் கருத்து -1

மாணவனின் கருத்து -1

**Que.7. 'பண்புடையார் பட்டுண் உலகம் அதுஇன்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்'**

**இக்குறளுக்கான விளக்கம் எழுதுங்கள்**

**Ans.** பண்புடையவர்கள் இல்லையானால் உலகம் எப்போதோ மண்ணுள் மறைந்து அழிந்து போயிருக்கும்

**Que.8. 'இனி போர்களுக்குத் தேவை**

**மனிதக் கேடயங்களல்ல**

**அமைதிக் கேடயங்களே!'**

**என்னும் வரிகளின் மூலம் ஆசிரியர் போ மணிவண்ணன் சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** கருத்து - போரினால் ஏற்படும் அழிவுகள் - 2

போரற்ற வாழ்வுக்கான வழிமுறைகள் – 2

**Que.9. அறம், அமைதி, ஒழுங்கு – இவை நாளுக்கு நாள் நலிவடைந்துகொண்டிருக்கும் இன்றைய சூழலில் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும்பொருட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரம் தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம் -

தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கருத்துக்கள்

**Que.10. எல்லாரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்**

**எல்லாரும் இந்திய மக்கள்**

**எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் விலை**

**எல்லாரும் இந்நாட்டு மன்னர்**

**- பாரதியார்**

**எல்லாரும் மக்களேயாவர் - இங்**

**கெல்லாரம் நிகராவர் எல்லாரும் உறவோர்**

**எல்லாரும் ஒரு தாயின் செல்வர் - இதை**

**எண்ணாத மக்கள் மாக்களென் போமே**

**- பாரதிதாசன்**

**இவ்வரு பாடல்களையும் ஒப்பீடு செய்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்**

**Ans.** பாடல்களின் கருத்து 2

ஒற்றுமை வேற்றுமைகளை காரண காரியங்களுடன் தொடர்ப்படுத்தி தன் கருத்துக்களை விளக்குதல் 2

**Que.11. பஞ்சாப் சிங்கம் என அழைக்கப்படுபவர் __________**

**Ans**. லாலா லஜபதி

**Que.12. வெவ்வேறு ஆசிரியர்களையும் படைப்புக்களையும் ஒப்பீடு செய்து கட்டுரை படைக்கிறார்கள்.**

**Ans.** பாடலின் கருத்து -2

இன்றைய சூழல் -1

ஒப்பீடு – 1

**Que.13. பின்வரும் பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுங்கள்**

**அந்த முரட்டு மேஜர் நீயாக உடுத்திக்கொண்டு நடந்து வருகிறாயா இல்லையா அதைத் தான் பார்க்கிறேன் என்று கைகளைத் தேய்த்துக் கொண்டான்**

**Ans.** அந்த முரட்டு மேஜர், “நீயாக உடுத்திக்கொண்டு நடந்து வருகிறாயா, இல்லையா? அதைத் தான் பார்க்கிறேன்!”, என்று கைகளைத் தேய்த்துக் கொண்டான்.

**Que.14. பரதநாட்டியமும் மோகினியாட்டமும் தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் சிறப்பான கலைகள். இவ்விரு மாநிலங்களுக்கிடையேயான பண்பாட்டை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் உங்கள் பள்ளிக் கலையரங்கில் வைத்து நடைபெறும் கலைவிழாவிற்காள சுவரொட்டி தயாரியுங்கள்**

**Ans.** வடிவம் -1

சொற் சுருக்கம் - 1

சொற்தெளிவு – 1

**Que.15. கீழ்க் காணும் கலப்புப் படத்துடன் தொடர்புடைய விழாக்களைப் பட்டியலிடுங்கள்.**










**கீழ்**

**Ans**. ரமலான், கிறிஸ்துமஸ், தீபாவளி, ஓணம்

**Que.16. தரப்பட்டுள்ள பாடல் வரிகளை வாசித்துப் பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**'தங்கக் கலசம் பொற்கோவில்**

**எங்கள் ஊரில் தேக்கோ தேக்கோ**

**சீலம் சட்லஜ் நதிகள் பாயும்**

**கோலம் காண ஆவோ ஆவோ'**

**(அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நதிகள் எவை?**

**(ஆ) மண்ணின் பெருமையை உணர்த்தும் இப்பாடலின் கருத்தினை விளக்கிக் குறிப்பு எழுதுங்க**

**Ans.** (அ) சீலம், சட்லஜ்

(ஆ) கவிதையின் கருத்து – விளக்கம்

**Que.17. ஆகஸ்ட் 15, சுதந்திர தினத்தன்று 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியமக்கள்' என்ற தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் முறையில் காலைப் பொதுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்வதற்கான உறுதிமொழி தயார் செய்யுங்கள்.**

**Ans.** தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் கருத்துக்கள்

மொழிநடை

**Que.18. தரப்பட்டுள்ள பாடல் வரிகளை வாசித்துப் பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம்**

**காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்**

**சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு**

**சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்**

**(அ) இப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள விளைபொருட்களை எடுத்தெழுதுங்கள்.**

**(ஆ) இவ்வரிகளில் பரிசாக எப்பொருள் கொடுக்கப்பட்டதாக கவிஞர் கூறுகிறார்?**

**Ans.** (அ) கோதுமை, வெற்றிலை

(ஆ) தந்தங்கள்

**Que.19. தரப்பட்டுள்ள பாடல் வரிகளை வாசித்துப் பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**"கங்கைப் பாயும் வங்கம்**

**செந்நெல் கதிர்கள் சாயும் தமிழகம்**

**தங்கம் விளையும் கன்னடம் - நல்**

**தென்னை வளரும் கேரளம்"**

**(அ) வங்கத்தில் பாயும் நதியின் பெயரை எழுதுங்கள்.**

**(ஆ) தங்கம் எங்கு விளைகிறது?**

**(இ) இப்பாடல் வரிகளின் அடிப்படையில் இந்தியாவின் வளங்களைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** அ) கங்கை

(ஆ) கன்னடம்

(இ) பாடல் கருத்து விளக்கம்

**Que.20. இமயச் சாரலில் ஒருவன் இருமினான்**

**குமரி வாழ்வான்மருந்தது கொண்டோடினான்**

**ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற**

**மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்**

**இப்பாடலில் மக்களின் மன ஒருமைப்பாடு வெளிப்படும் பாங்கினை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பாடல் உணர்த்தும் ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்கள்

கருத்துத் தெளிவு

**Que.21. "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற தலைப்பில் ஜனவரி 26 குடியரசு தினத்தன்று பள்ளிக் கலையரங்கில் வைத்து நடைபெறும் போட்டியில் உரையாற்றுவதற்கு ஏற்ற சொற்பொழிவு ஒன்று தயார் செய்யுங்கள்.**

**Ans.** ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்கள்

மேற்கோள் பயன்பாடு

கருத்துத் தெளிவு

மொழிநடை

**Que.22. கவியரசு கண்ணதாசனின் படைப்பு அல்லாதது**

**(அ) மாங்கனி (ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தி (இ) தைப்பாவை (ஈ) மரப்பாவை**

**Ans.** மரப்பாவை

**Que.23. தமிழக அரசின் அவைக் கவிஞராக இருந்தவர்**

**(அ) பாரதிதாசன் (ஆ) கண்ணதாசன் (இ) வைரமுத்து (ஈ) போ. மணிவண்ணன்**

**Ans.** கண்ணதாசன்

**Que.24. கண்ணதாசனின் இயற்பெயர் __________**

**Ans.** முத்தையா

**Que.25. குடியரசு தின விழா, சுதந்திர தின விழா போன்றவை பாரதத் திருநாட்டில் பொதுவாகக் கொண்டாடப்படும் விழாக்கள். இவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** விழா பற்றிய விளக்கம்

கருத்துத் தெளிவு

மொழிநடை

**Que.26. v**

**"சத்தியம் தவறாது காக்கும் கொடி - சாதி**

**சமயச் சழக்குகளைப் போக்கும் கொடி**

**உத்தம வீரர்களும் பத்தினிகளும் - தத்தம்**

**உயிருக்குயிராகப் போற்றுங்கொடி"**

**என்னும் கொடிவணக்கப் பாடல் உணர்த்தும் கருத்துக்களை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** ஒற்றுமை

**Que.27. "நாரொன்றிற் கட்டிய பூமாலை**

**நவ மலர்கள் பூத்ததொரு சோலை"**

**என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப பாரத மக்களாகிய நாம் ஒருமைப்பாட்டுடன் வாழ்வதற்கான வழிமுறைகளைக் குறிப்பாகத் தொகுத்து எழுதுங்கள்.**

**Ans.** பாடலின் கருத்து

ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம் பற்றிய விளக்கம்

**Que.28. மக்களிடையே பல்வகைப் பண்பாட்டுக் கூறுகள் நிற வேறுபாடுகள் இருந்தாலும் அவை சமுதாய வாழ்வில் எவ்விதப் பிரிவினையும் உண்டாக்கலாகா என்னும் கருத்தினை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்**

**Ans.** பல மொழிகள் - பண்பாடு

ஒருமைப்பாடு என்ற சிந்தனை வளர்வதற்கான வழிமுறைகள்

**Que.29. 'நாமெல்லாம் ஒரே மரத்தின் இலைகள்' எனக் கூறியவர்**

**(அ) நேரு (ஆ) காந்தியடிகள் (இ) காமராசர் (ஈ) பெரியார்**

**Ans.** ((ஆ) காந்தியடிகள்

**Que.30. இயேசு காவியம் பாடியவர்**

**(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார் (இ) கவிமணி (ஈ) கண்ணதாசன்**

**Ans**. (ஈ) கண்ணதாசன்

**Que.31. 'எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே' - ஔவையார்**

**'பண்புடையார் பட்டுண் உலகம் அதுஇன்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்' – திருவள்ளுவர்**

**இவ்விரு பாடல்களையும் ஒப்பீடு செய்து எழுதுங்கள்.**

**Ans.** பாடல்களின் கருத்து

ஒப்பிடுதல்

மொழிநடை

**Que.32. உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட விரும்புகின்ற உங்கள் உறவினர் ஒருவருக்கு குடியரசாட்சியின் தன்மைகளை விளக்கிக் கூறும்பொருட்டு கடிதம் ஒன்று எழுதுங்கள்.**

**Ans.** வடிவம்

கருத்துக்கள்

மொழிநடை

**Que.33. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்**

**(அ) அமைதி யுத்தம் - கண்ணதாசன்**

**(ஆ) ஒரு தாயின் செல்வர் - போ. மணிவண்ணன்**

**(இ) என் வீடு - பாரதியார்**

**(ஈ) பாரத சமுதாயம் – பாரதிதாசன்**

**Ans.** (அ) போ. மணிவண்ணன்

(ஆ) பாரதிதாசன்

(இ) கண்ணதாசன்

(ஈ) பாரதியார்

**Que.34. 'சட்டங்கள் ஏழை மக்களுக்கு ஒரு வடிவிலும் செல்வர்களுக்கு மற்றொரு வடிவிலும் பயன்படுகின்றன'. - இக்கருத்தை இன்றைய சூழலோடு ஒப்பிட்டு விமர்சனம் செய்யுங்கள்.**

**Ans.** கருத்து வெளியீடு

இன்றைய சமுதாய நிலை

ஒப்பீடு

**Que.35. 'எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே' - இப்பாடல் வரிகளின் பொருள்**

**(அ) நல்ல மக்கள் இல்லாத நிலம் கெட்ட நிலம்**

**(ஆ) நல்ல மக்கள் இல்லாத நிலம் நல்ல நிலம்**

**Ans.** (இ) நல்ல மக்கள் வாழும் நிலம் நல்ல நிலம்

**Que.36. எல்லா மதங்களும் ஒன்றே - அவை**

**எல்லாரும் இன்புற்று வாழவீர்கள் என்றே**

**சொல்லால் முழங்குவது கண்டீர் - அவை**

**துன்புற்று வாழந்திடச் சொல்லியதும் உண்டா**

**எல்லாரும் மகமகளேயாவர் - இங்**

**கெல்லாரும் நிகராவர் எல்லாரும் உறவோர்**

**எல்லாரும் ஒரு தாயின் செல்வர் - இதை**

**எண்ணாத மக்கள் மாக்களென் போமே**

**பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய இக்கவிதையின் மையக்கருத்தெழுதி நயம் பாராட்டுங்கள்.**

**Ans.** மையக்கருத்து

சொல் நயம்(எதுகை மோனை இயைபு...)

பொருள் நயம்

**Que.37. நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போரால் வரும் பின்விளைவுகளையும் போரற்ற உலகம் உருவாக நீங்கள் கூறும் வழிமுறைகளையும் விளக்கி தலையங்கம் எழுதுங்கள்.**

**Ans.** இன்றைய நிலையில் போர்ச் சூழல்கள்

மாணவர் கூறும் தீர்வு

வடிவம்

**Que.38. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுங்கள்.**

**புருஷன், பாஷை. சிப்பாய், ஸ்திரீ**

**Ans.** கணவன் (ஆண்), மொழி, காவலர், பெண்

**Que.39. மக்கள் நலத்துக்கு மதமா - அன்றி**

**மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்**

**எல்லா மதங்களும் ஒன்றே - அவை**

**எல்லாரும் இன்புற்று வாழ்வீர்கள் என்றே**

**இக்கவிதை வரிகளில் உள்ள எதுகை மோனையை எடுத்தெழுதுங்கள்.**

**Ans.** எதுகை : எல்லா, எல்லாரும்

மோனை : மக்கள், மதத்தின்

**Que.40. பள்ளியில் சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின்போது உரையாற்ற "பெற்ற சுதந்திரத்தைப்**

**பேணிக் காப்போம்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஒன்று தயாரியுங்கள்.**

**Ans.** கருத்துக்கள் -

முகமன் -

மேற்கோள் பயன்பாடு -

மொழிநடை

**Que.41. பொருத்துக**

**(அ) அஸ்தி - மழை**

**(ஆ) ஸ்பஷ்டம் - பறவைகள்**

**(இ) மாரி - எலும்பு**

**(ஈ) பட்சிகள் – தெளிவு**

**Ans.** (அ) எலும்பு

(ஆ) தெளிவு

(இ) மழை

(ஈ) பட்சிகள்

**Que.42. புதுமைப்பித்தன் எழுதிய பைத்தியக்காரி என்ற கதையயில் வரும் படைவீரன் பாத்திரப் படைப்பினை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கதையின் மையக் கருத்து

விமர்சனம்

மாணவன் கருத்து

**Que.43. பின்வரும் பகுதியை வாசித்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**அந்த பித்துக்குளியின் ஞாபகம் என் மனதில் எதை வைத்தோ அடித்தது போல் எழுந்தது. அந்த நாசமாய்ப் போன வருஷத்தில் எத்தனை பேரோ இறந்திருக்கலாம். ஆனால் அந்த பித்துக்குளியின் மண்டையோடுதான் இது என நான் திட்டமாகக் கூறுவேன்.**

**(அ) பைத்தியக்காரி என்ற கதையின் முடிவில் வருகின்ற பித்துக்குளி யார்?**

**(ஆ) பித்துக்குளிக்கு என்ன நேர்ந்தது என்பதை விளக்கி எழுதுங்கள்?**

**Ans.** (அ) மனநிலை பாதிக்கப்பட்ட பெண்

(ஆ) தந்தை, கணவர், குழந்தை ஆகியோர் அடுத்தடுத்துஇறந்ததால்மனநிலை பாதிக்கப்பட்ட பெண். போர்க் காலத்தில் ராணுவ அதிகாரி அவளைப் பார்க்க விரும்பினான். இயலாததால் கட்டிலோடு எடுத்துச் சென்று காட்டில் விட்டான். குளிரில் விறைத்து இறந்து விட்டாள்.

**Que.44. 'தேயிலை மிளகு விளைவதைப் பாத்து**

**வெள்ளையன் வந்தான் வாங்க'**

**இப்பாடல் வரிகளில் அடங்கியுள்ள வரலாற்றுச் செய்தியைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** கருத்து விளக்கம்

(ஆங்கிலேயர்களின் வருகை - வியாபார நோக்கம் - அடிமைப்படுத்தல்)

மொழி நடை

**Que.45. சத்தியம் எங்கள் வேதம்**

**சமத்துவம் எங்கள் கீதம்**

**வருவதைப் பகிர்ந்து உண்போம்**

**வந்தே மாதரம் என்போம் - கண்ணதாசனின் இக்கவிதை வரிகள் உணர்த்தும் கருத்துக்களை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கவிதையின் பொருள்

மொழிநடை

**Que.46. ஆசிரியரையும் கவிதை வரிகளையும் பொருத்தி எழுதுங்கள்.**

**(அ) பாரதியார் - இந்திய நாடு என் வீடு**

**(ஆ) கண்ணதாசன் - எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்**

**(இ) பாரதிதாசன் - மனிதப்பண்புகளால் மருத்துவம் பார்ப்போம்**

**(ஈ) மணிவண்ணன் - ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும்**

**Ans.** (அ) எல்லாரும் ஓர் குலம்... (ஆ) .இந்திய நாடு...

(இ) ஒருவர்க்கு வந்தது.. (ஈ) மனிதப் பண்புகளால்...

**Que.47. இன்று மதத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் உருவாகின்ற பூசல்களைத் தவிர்க்க நீங்கள் கூறும் பரிந்துரைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** பொருத்தமான கருத்துக்கள்

**Que.48. நமது தேசியக் கொடியின் வண்ணங்களும் அசோகச் சக்கரமும் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது அத்தகைய சிறப்புமிக்க நமது தேசியக்கொடி வெளிப்படுத்துகின்ற இந்திய ஒருமைப்பாட்டுணர்வை விளக்கி எழுதுங்கள்.**

**Ans.** கருத்து விளக்கம்

(மூன்று நிறங்கள் - அவற்றின் பொருள் - சக்கரம் - 24 ஆரங்கள் - தேச ஒற்றுமை) -

மொழி நடை –

**Que.49. 'ஒரு ஜாதி'; ஒரு தெய்வம்; ஒரு மதம் மானிடர்க்கு ' - நாராயணகுரு**

**'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' - திருமூலர்**

**இவ்வரிகளில் வெளிப்படும் கருத்துக்களைச் ஒப்பீடு செய்து குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** பாடல்களின் கருத்து

ஒப்பீடு

**Que.50. கவிப்பேரரசு கண்ணதாசன் எழுதிய ஆட்டனத்தி ஆதிமந்தி என்ற கவிதை நூலின் விலை230ரூ 524 பக்கங்களைக் கொண்ட இந்நூல் கண்ணதாசன் பதிப்பகத்தாரால் 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான நூலடைவு தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம்

வரிசைமுறை

**Que.51. 'இமயச்சாரலில் ஒருவன் இருமினான்**

**குமரி வாழ்வான் மருந்து கொண்டோடினான்'**

**- இப்பாடல் வரிகளுக்கேற்ற மனித நேய செயல்கள் தற்போதும் நடைபெறுகின்றன என்பதற்குச் சான்று தந்து விளக்குங்கள்**.

**Ans.** பாடலின் கருத்து

உதாரணத்தோடு ஒப்பீடு

**Que.52. 'முப்பது கோடி முகமுடையாள்; உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்**

**செப்புமொழி பதினெட்டுடையாள்; எனில் சிந்தனை ஒன்றுடையாள்' - விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் பாரதத் தாயைக் குறித்து பாரதியார் பாடிய இப்பாடல் வரிகளை இன்றையச் சூழலோடு ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பாடலின் பொருள்

இன்றைய நிலை

**Que.53. உலக அமைதி தினமாகிய செப்டம்பர் 21-ஆம் நாள் பள்ளியில் நடைபெறும் காலைக்கூட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதற்கான உறுதிமொழி தயார் செய்யுங்கள்.**

**Ans.** கருத்துக்கள்

உரைமுறை

**Que.54. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்'**

**(கேளீர் - உறவினர்) கணியன் பூங்குன்றனாரின் இக்கவிதை வரி நமக்கு உணர்த்தும் கருத்துக்களை சிறு குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** பொருத்தமான விளக்கம்

**Que.55. "ஒற்றுமையே பலம்" என்ற பழமொழிக்குப் பொருத்தமான நிகழ்ச்சி ஒன்றை எழுதுங்கள்.**

**Ans.** பழமொழி புரிதல் -

பொருத்தமான நிகழ்வு-

**Que.56. வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்**

**வீட்டில் வளருது கண்டீர்**

**பிள்ளைகள் பெற்றதப்பூனை - அவை**

**பேருக்கொரு நிறமாகும்**

**சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்**

**சாந்து நிறமொரு குட்டி**

**பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்**

**பாலின் நிறமொரு குட்டி**

**எந்த நிறமிருந்தாலும் அவை**

**யாவும் ஒரே தரமன்றோ**

**இந்த நிறம் சிறிதென்றும்**

**இஃது ஏற்றமென்றும் சொல்லலாமோ**

**பாரதியாரின் இக்கவிதை வரிகளுக்கு மையக்கருத்து எழுதி நயம் பாராட்டுங்கள்.**

**Ans.** மையக்கருத்து -

எதுகை -

மோனை -

பொருள் நயம்

**Que.57. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்.**

**(அ) கங்கை - கன்னடம்**

**(ஆ) காவிரி - வங்கம்**

**(இ) தென்னை - விசாகப்பட்டினம்**

**(ஈ) கப்பல் – கேரளம்**

**Ans.** (அ) கங்கை - வங்கம்

(ஆ) காவிரி - கன்னடம்

(இ) தென்னை - கேரளம்

(ஈ) கப்பல் - விசாகப்பட்டினம்